# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

11வது ஆண்டில்

விளம்பரம்™ VLAMBARAM™

416-282-8059

416-282-4978

நதி 11 DECEMBER 01, 2001 பாலம் 23



கொலஸ்ரோல் படுத்தும் பாடு (பக்கம் - 15)

துப்பறிவதில் புதிய கண்டுபிடிப்பு (பக்கம் - 02)

ஆங்கிலப் போர்த் திரைப்பட வரிசையில் (பக்கம் - 08)

சிறிலங்கா வெற்றிக்கு முரளியா காரணம் (பக்கம் - 06)

முதன்மை வட்டி குறைவு/மோட்கேஜ் அதிகரிப்பு (பக்கம் - 17)

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் (பக்கம் - 10)

ஏலியன்கள் இருப்பது சாத்தியமாகுமா? (பக்கம் - 09)

திருமணம் செய்யாதவர் கொண்டு செல்லும் பூ (பக்கம் -11)

ஒன்லைன் வீடியோக் கொப்பி (பக்கம் - 12)


## உன்னை அறிந்தால்

தன்னைத் தானே நம்புதல், ஆழமாக சிந்தித்து முடிவெடுத்தல், ஒரு செயலைத் தன்னுடைய நன்மையையும் தங்களுடன் சார்ந்தவர்களின் நன்மைகளையும் கருத்தில் கொண்டு பிறரிற்குத் தீங்கு வராமல் நன்மை கிடைக்காவிட்டாலும் முன்னதாகத் திட்டமிடுதல். திட்டமிடுதலில் காலத்திற்கேற்ப நன்மை கருதி சில செயல் திட்டங்களை மாற்றுதல் போன்றவை வாழ்வில் வெற்றி பெறுபவர்கள் செய்யும் செயல்களில் சில. இவற்றை நடைமுறைப் படுத்தாமலும் வெற்றி பெற்றவர்களும் இருக்கிறார்கள். விதிவிலக்குகள் எப்பொழுதும் இருக்கத்தான் செய்யும். படிக்காத மேதைகளும் படித்த அறிவிலிகளும் இருக்கத்தான் செய்யும். புதிய நாட்டில் புகுந்த தமிழர் பலமுறைகளிலும் முன்னேறுவது சிறந்தது.

மேலும் பல புதிய வழிகளைக் கண்டுபிடித்து முன்னேற நினைப்பது, மற்றயவர்களிற்கு வழிகாட்டியாக இருக்க நினைப்பது நமக்கும், பிறந்த, புகுந்த நாட்டிற்கும் சிறந்தது. இவ்வாறு இருக்க சிலர் தங்களுடைய அனுபவக் குறைவினால் தாம் என்ன செய்வது என்று தெரியாமல் எதுவித


(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- வாழ்க்கையின் ஒழுங்குப்பாட்டில் இருந்து வாழ்க்கைக்கு வலிவு வருகிறது.
- பெரியவைகளில் பெரியது எது; வெட்டவெளி. அதில் படைப்பு அனைத்தும் தங்கியிருக்கிறது.
- நிலையற்றவைகளுள் நிலைத்தது எது? நம்பிக்கை மற்றவைகள் எல்லாம் கை நழுவிப் போனபின்பும் அது மனிதனை விட்டு விலகுவது இல்லை.
- நேரான மனமுடையவனுக்கு அருகில் கடவுள் உள்ளார். கோணலான் மனமுடையவனுக்கும் கடவுளுக்கும் வெகுதூரம்.
- மனதில் கெட்ட எண்ணங்கள் உதிக்கின்றனவே என்று கவலைப் படாதே. அவைகள் தோன்றத் தோன்ற அவைகளை மறந்துவிடு.




RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

P. கைலாசநாதன்
Barrister & Solicitor



- குற்றவியல்
- அகதிநிலை
- ஸ்பொன்சர்
- குடும்ப விபரங்கள்
- குடிவரவு
- மேன்முறையீடு
- வியாபாரம்
- வீடு

☎: (416) 752-9561
2401 Eglinton Ave. E., Suite 302, Scarborough

Singapore Communication

- $25.00
- 100 + 50 bonus Min Free
- Fri: 6p.m. - 8a.m. Free
- C/F C/W Free - Messaging Pack &
- Call ID Free For (3) Months
- Free Gift Available in Store

416 - 740 - 5292
416 - 745 - 2378 (Sathi/Raj)
Hot Line: 416 - 866 - 9700



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel Business

London Life

LIBERTY MUTUAL

© 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (93)

-விஜே குலத்துங்கம்



கடந்த இதழ்களில் குற்றிவியலில் துப்பறிவதில் உதவியாக இருக்கும் விஞ்ஞானப் பகுதியான Forensic Science பற்றிப் பார்த்தோம். இந்த இதழிலும் இது பற்றிய மேலும் சில விடயங்களைப் பார்ப்போம். குற்றம் நடந்த இடங்களில் அதிகமாக குற்றம் புரிந்தவர்கள் சில தடயங்களை விட்டுச் செல்லலாம். அதில் Fibres எனப்படும் நார்களும் அடங்கும். இவை உடுப்புகளில் இருந்தோ, படுக்கை விரிப்புகளில் இருந்தோ, கார்பெட் (carpet) விரிப்புகளில் இருந்தோ வெளிப்படலாம். சில வேளைகளில் குற்றவாளிகள் இந்த நார்களை தங்களிடம் இருந்து, குற்றம் நடந்த இடத்தில் விட்டுச் செல்லலாம். உடுப்புகள், காலுறை, தொப்பி போன்றவற்றில் இருந்து நார்கள் கீழே விழலாம். சில வேளைகளில் குற்றம் நடந்த இடத்தில் இருந்து இவ் வகையான நார்களை குற்றவாளி தன்னுடன் எடுத்துச் செல்லலாம். படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள் போன்றவற்றின் நார்கள் குற்றவாளியின் உடலுடன் அல்லது உடுப்புகளுடன் ஒட்டிச் செல்லலாம். இந்த நார்கள் சாதாரணமாக கண்ணுக்கு புலப்படாமல் இருக்கலாம். ஆனால் பூதக் கண்ணாடியுடன் நல்ல வெளிச்சமுள்ள விளக்குகள் மூலம் இவற்றைக் கண்டு பிடிக்கலாம். குற்றம் நடந்த இடத்தில் செலோடேப் அல்லது ஸ்கொட் டேப்பின் மூலம் ஒற்றி எடுக்கும் போது, நார்களை இலகுவில் எடுத்து விடலாம். ஒரு குற்றம் நடந்த இடத்திலுள்ள சகல நார்களை கொடுக்கக் கூடிய இடங்களில் இருந்தும் மாதிரிகளை நிபுணர்கள் எடுத்துக் கொள்வார்கள். பின்னர் சந்தேக நபர்களின் இருப்பிடங்களில் மோட்டார் வண்டிகளில், உடுப்புகளில் இவை உள்ளனவா எனப் பரிசோதிப்பார்கள்.

இவற்றை விட மனிதரின் தலைமயிரும் ஒரு தடயப் பொருளாகும். சாராசரி மனிதர் ஒருவர் ஒரு நாளைக்கு 100 தலைமயிர்களை உதிர்த்துக் கொள்வார். குற்றம் நடந்த இடத்தில் தலைமயிர் உதிர்ந்து இருக்கலாம் அல்லது இழுபட்டு விழுந்தும் இருக்கலாம். பாதிக்கப்பட்டவரிடம் இருந்தும் குற்றவாளி சந்தேக நபர்களிடம் இருந்தும் மாதிரிகள் எடுக்கப்பட்டு சேகரிக்கப்படும். முக்கியமாக பாலியல் குற்றங்களில் உரோமங்கள் முக்கிய தடயப் பொருளாக கருதப்படும். கண்ணாடித் துண்டுகளும் சப்பாத்துகள், உடுப்புகள் ஆகியவற்றில் ஒட்டிச் செல்லலாம். கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய கண்ணாடித் துண்டுகளையும் Forensic நிபுணர்கள் கண்டு பிடித்து விடுவார்கள். இந்த குற்றவியல் விஞ்ஞானத்தின் இன்னுமொரு பகுதி Forensic Entomology எனப்படும். Entomology என்பது பூச்சி புழுக்கள் பற்றிய படிப்பாகும். இறந்த உடல் ஒரு இடத்தில் பல நாட்கள் இருக்கும் போது அதில் புழு, பூச்சிகள் வளரத் தொடங்கும். ஒருவர் இறந்ததும் அந்த உடலை நோக்கி சில நிமிடங்கிளில் வருவது Blow Fly எனப்படும் ஒரு பெரிய இலையான் அல்லது ஈ ஆகும். இது நீல நிற உடலைக் கொண்டதாக இருக்கும். இவற்றின் பெண் ஈக்கள் உடலின் கண், மூக்கு போன்ற ஒன்பது வாசங்களுக்கு அண்மையில் அல்லது காயங்கள் இருக்கும் இடத்தில் முட்டைகளை இட்டுவிட்டு இந்த ஈக்கள் தனது வளர்ச்சியின் பல்வேறு நிலைகளான புழு, கூட்டுப் புழு போன்ற நிலைகளை கடந்து முதிர்ச்சியடையும். ஒவ்வொரு வளர்ச்சி நிலையும் குறிப்பிட்ட நாட்களை எடுக்கும். எனவே ஓர் இறந்த உடலில் இருக்கும் பூச்சிகளின் வளர்ச்சி நிலையை வைத்து, உடல் எத்தனை நாட்களாக அந்த இடத்தல் இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இதை விட உடல் உக்கும் நிலைகளைப் பொறுத்து, வெவ்வேறு பூச்சிகள் அந்த உடலில் வளரத் தொடங்கும். எனவே உடலில் உள்ள பூச்சிகளை ஆராய்வதன் மூலம் எவ்வளவு காலம் அந்த உடல் அந்த இடத்தல் கிடக்கின்றது என்பதை அறியலாம். சில வேளைகளில் ஒப்பீட்டிற்காக ஒரு இறந்த பன்றியை குறிப்பிட்ட இடத்தில் வைத்து அதில் வளரும் பூச்சிகளையும் நாட்களையும் குறித்து மனித உடலுடன் ஒப்பீட்டு நாட்களை அறிந்து கொள்ளலாம். ஒரு உடல் நஞ்சூட்டப்பட்டு இறந்ததா என்பதகைக் கூட பல நாட்கள் சென்றால் கூட கண்டுபிடிக்கலாம். நச்சுப் பொருட்கள் பூச்சிகளின் வாழ்க்கைச் சக்கரத்தை மாற்றியமைக்கும். இவற்றை வைத்து எவ்வகையான நச்சுப் பொருள் உபயோகிக்கப்பட்டுள்ளது என அறிந்து கொள்ளலாம்.

குற்றவியல் விஞ்ஞானத்தின் இன்னுமொரு பகுதி Forensic Botany எனப்படும். இது தாவரவியல் ஆகும். இறப்பு நேரிட்டதும் வயிற்றினுள் சமிபாடு நின்றுவிடும். எனவே வயிற்றினுள் இருக்கும் அல்லது இரைப்பையினுள் இருக்கும் பொருட்களை வைத்து இறந்த நேரத்தைக் க்ண்டுபிடிக்கலாம். மாமிசத்தை விட, இலைக்கறிகள் சமிபாடடையக் கூடிய நேரம் எடுக்கும். வயிற்றினுள் இருக்கும் தாவர உணவுகளின் நிலையை வைத்து நேரத்தை அனுமானிக்கலாம். ஒரு குற்றவியல் சம்பவத்தின் போது, வெவ்வேறு இடத்தில் நடந்த கொலைகளில் இறந்தவர்களின் வயிற்றில் இருந்தவற்றைக் கொண்டு இரண்டு கொலைகளுக்கும் சம்பந்தம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட தாவரங்கள் வளரும். சில சந்தர்ப்பங்களில் சந்தேக நபர்களின் காலணிகள், மோட்டார் வண்டியின் டயர்கள் போன்றவற்றில் ஒட்டியிருக்கும் புல், இலைத் துண்டுகள் கண்டுபிடிக்கலாம். சில வேளைகளில் சம்பவம் நடந்த இடத்திற்கு கொலையாளி சென்றாரா என்பதைக் கூட இவற்றை வைத்துக் கண்டுபிடிக்காலம். மோட்டார் வண்டியின் உள்ளேயும் இந்த தடயங்களைத் தேடுவார்கள். ஒரு தாவரவியல் நிபுணர் இந்த சிறிய புல், இலைத் துண்டுகளை வைத்து பல துப்புக்களை அறிந்து விடுவர். மகரந்த மணிகளை வைத்தும் துப்புத் துலக்கப்படலாம். இதை Palynology என்று கூறுவார்கள். ஒரு வீட்டினுள் ஒரு கள்வன் புகும் பொழுது அவன் எந்த வழியால் உள்ளே நுழைந்தான் என்பதைக் கூட அவர் உடையிலுள்ள மகரந்த மணிகளையும் வீட்டைச் சுற்றியுள்ள புல், பூச்செடிகளிலுள்ள மகரந்த மணிகளையும் ஒப்பிட்டுக் கண்டுபிடித்து விடலாம். இதைவிட கொலை நடந்த இடத்தில் குற்றவாளி இருந்தாரா என்பதைக் கூட கண்டுபிடிக்கலாம்.

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

யோகாஸ்

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 125

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | ■ |
| | ■ | | ■ | 3 | ■ | ■ | 4 |
| | ■ | ■ | 5 | ■ | ■ | 6 | ■ |
| | | 7 | ■ | | | | 8 |
| ■ | ■ | | ■ | | ■ | | 9 |
| 10 | | | ■ | | 11 | ■ | |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| 12 | ■ | 13 | | 14 | | | |

**இடமிருந்து - வலம்**

1. பாரதப் போர் நடைபெற்ற இடம்
4. மலர்
5. சோலை
7. ஊர்வன ஒன்று (வல - இட)
8. மிகுதி (வல - இட)
9. நிலம் (வல - இட)
10. நீர் வாழ் பிராணி ஒன்று
11. மூன்று பக்கமும் தரை சூழ்ந்த கடல் (வல - இட)
13. தொண்டு

**மேலிருந்து - கீழ்**

1. சேய்
2. தோழி
3. புதினம் (கீழ் - மேல்)
6. வலிமை
7. விசுவாசம்
8. தனிமை
12. சோறு வடித்த நீர் (கீழ் - மேல்)
14. நிச்சயமாய் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் DECEMBER 28, 2001க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | த | ரா | ட் | டி | ன | ன் |
| ன | ■ | லை | ■ | ■ | ■ | ■ | ■ |
| க | ■ | மு | ள் | மு | ரு | க் | கு |
| ர | ■ | றை | ■ | றை | தி | ■ | க் |
| ன் | வா | ■ | சை | ■ | ■ | ■ | மு |
| ■ | அ | ந் | த | ரா | க் | ஸ | ■ |
| தி | ■ | ■ | ■ | ச | ■ | ■ | எ |
| ப | ஞ் | ச | பூ | த | ங் | க | ள் |

**124இல் வெற்றி பெற்றோர்**

1) T. Vadivel, Toronto, Ont.
2) S. Tharshini, Toronto, Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் மசென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற் பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 044-621-0294

கலைமகள் புத்தக நிலையம்

•சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
•தமிழ்ப் புத்தகங்கள்
•கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
•இலங்கை/இந்திய பத்திரிகைகள்
•குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
•CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
•கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

காலணிகளில் ஒட்டியிருக்கும் மண்ணை ஆராய்ந்து, அதில் உள்ள நுண்ணுயிர்களை வைத்து, இந்த மண் எந்த இடத்தில் இருந்து வந்தது என்பதைக் கூடக் கண்டறியலாம். அடுத்த இதழில் குற்றவியலில் பிரபல்யமான DNA பற்றியும் பொய் பேசுவர்களை கண்டுபிடிக்கும் Lie Detector பற்றியும் பார்ப்போம்.

*****************************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.*

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. ( MIDLAND & LAWRENCE )

☎ [416] 285-4998


## ஆனைமுகன் அருளிருந்தால்....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

விநாயகர் வழிபாடு மிக எளிமையானது. சாணம். சந்தனம். வெல்லம். மஞ்சள். புற்றுமண் இவற்றில் ஏதேனும் ஒன்றில் விநாயகர் திருவுருவை பிடித்து வைத்து பூசை செய்யலாம். மந்திரங்களையோ அல்லது தமிழ் பாடல்களையோ பாடினால் அவர் அம் மூர்த்தத்தில் எழுந்தருளி விடுவார். வெற்றி கிடைக்க விநாயகரை வினயமுடன் தொழுகின்றோம் ஆனைமுகனின் அருள்வளம் அதிகம் ஆகையால் மண்ணவர்கள் மாத்திரமன்றி விண்ணவர்களும் விநாயகரை காதலாற் கூப்புவர் தம்கை எனப்படுகின்றது.

சங்கத் தமிழ் மூன்றையும் தரும்படி சங்கரனார் மைந்தரிடம் வேண்டுகின்றார் ஔவைப் பிராட்டியார். விநாயகர் முன் விரும்பியதைப் படைத்து தான் விழுமியது எனக் கருதும் முத்தமிழை அருளும் படி வேண்டுகின்றார் அவர்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா - என்பது அவர்வாக்கு

விநாயகர் வழிபாட்டிற்கு சில சிறப்பம்சங்கள் உண்டு. சிதறு தேங்காய் அடிப்பது. நெற்றியில் குட்டிக் கொள்வது தோப்புக் கரணம் போடுவது அவையாம் சிதறு தேங்காய் அடிப்பது நமது அகந்தையை அழிப்பதாகும். நான் - போனால் தான் நம்பனை நண்ண முடியும் என்பதை உணர்த்துவது. கஜமுக அசுரனை அழித்த போது அவன் மாற்றுருக் கொண்டு பெருஞ்சாளியாக வந்தான். அதனை தனது வாகனமாக ஏற்று அவனுக்கு பென்னம் பெரிய பிள்ளையார் சின்னச் சிறிய எலியை வாகனமாக அருள் பாலித்தார். பிள்ளையார் கொண்டுள்ளது அறிவுக்கு விருந்து. கஜமுக அசுரனுக்கு பயந்து பணிந்து தேவர்கள் எவ்வாறு தோப்புக்கரணம் போட்டார்களோ. அதன் படியே நாம் பிள்ளையார் முன் அப்படிச் செய்கின்றோம். இப்படியாக வணங்கினால் காரிய சித்தி ஏற்படும்.

விநாயகருடைய சக்திகளாகிய சித்தியும் புத்தியும் பிரம தேவருடைய புதல்விகளாவர். வல்லபை சக்தியுடனும் விநாயகர் தோற்றம் மிளிரும் வல்லமை மரீசி என்ற முனிவருடைய புதல்வியாவார். ஒரு சமயம் விநாயகர் திருமாலின் புதல்வியர்களாகிய பன்னிருவரை மணந்தருளினார் என்றும் கூறப்படுகின்றது.

விநாயகருக்குள் சகல சக்திகளும் அடக்கம். ஆதலால் இவர் சகல சௌபாக்கியங்களையும் தருவதுடன் முத்தியும் அருளுவார் என்பதில் ஐயமில்லை.

கணபதி என்றிடக் கலங்கும் வல்லினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமமாதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே!

அம்மை அப்பரே உலகம் என்று அறிவுறுத்தி மாம்பழம் பெற்றவர். விநாயகர் வாக்கும் நல்ல மனமும் வளமும் வனப்பும் அவர் அருளால் ஆவன.

ஔவையாரை தும்பிக்கையால் ஒரே தூக்காகக் தூக்கி கைலாசம் சேர்த்ததைப் போன்று விநாயகர் அநாயசமாக நம்மையும் மேலே உயர்த்தி விடுவார். எனவே தும்பிக்கையானடம் நம்பிக்கை வைத்தால் நமக்கு தெம்பினைத்தந்து செம்மாந்து வாழச் செய்வார்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வுமிகுந்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்து வினைகளே

அப்பம் முப்பழம் அமுது செய்தருளிய தொப்பை
அப்பனை தொழ அறுமே

ஓங்கார ரூபனாகவும் ஆனந்தத்தின் இருப்பிடமாகவும் விளங்கும் கணபதியை கைதொழுதேற்றிக் கடைத்தேறுவோம்.

ஓம் தத் புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய திமஹி
தந்தோ நந்தி ப்ர சோத்யாத்

## உன்னை அறிந்தால்

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

பின்யோசனைகளும் இல்லாமல் நடப்பது கவலைக்குரியது. யாரிடம் குற்றம் / குறை சொல்லவது.

இப்படி செய்வதால் தமது பணத்தையும் நேரத்தையும் வாழ்க்கையின் முக்கிய காலத்தையும் குடும்பத்தையும்... இழக்க நேரிடலாம். அல்லது நிர்ப்பந்திக்கலாம். சிந்தித்துச் செயல்பட்டால் உங்களிற்கும் உங்களைச் சார்ந்தவர்களிற்கும் நன்மை செய்தவர்களாவீர்கள்.

*நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!*

-நெற்றிக்கண்ணன்


நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 10 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair

NTE AUTO INC.
New Trade Engineering

என். ரீ. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

Tel: (416) 750 - 1573

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



# அன்புத் தமிழ்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டால் எவன்செய்ய வேண்டுமோ மற்றிகா; அவன்கண்ணி யன்றோ அது;
பெய்போது அறியாத்தன் கூழையுள் ஏதிலான்;
கைபுனை கண்ணி முடித்தாள் என்று யாய் கேட்பின்
செய்வதில் ஆகுமோ மற்று;
எல்லாத் தவறும் அறும்; ஓஒ அஃதறு மாறு;
ஆயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்; நின்வெய்யன் ஆயின் அவன்வெய்யை நீயாயின்
நின்னைநோ தக்கதோ இல்லைமன்;
நின் நெஞ்சம்; அன்னைநெஞ்சு ஆகப் பெறின்;
அன்னையோ, ஆயர் மகனையும் காதலை கைம்மிக்க
ஞாயையும் அஞ்சுதி யாயின் அரிதரோ; நீ உற்ற நோய்க்கு மருந்து;
மருந்து இன்றி யான் உற்ற துயராயின் எல்லா; வருந்துவேன் அல்லனோ யான்;

வருந்தாதி,
மண்ணிமா சற்றநின் கூழையுள் ஏறவன்
கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற்று இவட்கென் நின்னை அப்
பொய்யில் பொதுவற்கு அடைசூழ்ந்தார் தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு. - கலித்தொகை: முல்லைக் கலி 7

| | |
|---|---|
| குறும்பு இவர் - முல்லைநிலத்து ஊரில் உள்ள | குறையென - காரியமென |
| புல்லினத்தார் - ஆட்டு இடையர் | சில்லை - முரண்படும் |
| மால் - திருமால், முல்லை நிலத்துத் தெய்வம் | கோடு - கொம்பு |
| கூழை - கூந்தல் | மண்ணி - கழுவி |
| வெய்தல் - விரும்புதல் | கண்ணி - பூ |
| ஏழை இரும் புகர் பொங்க - ஏழையாகிய பெரிய மறை ஏறு துள்ள | |
| இகா - தாழாத, விரும்பாத | ஏதிலான் - அயலான் |
| அன்னையோ - அன்ன தன்மையோ, இன்னும் விளங்க வில்லையோ | |
| மாசு அற்ற - அழுக்கு இல்லாத | பொதுவன் - இடையன் |
| அடை சூழ்ந்தார் - கொடுக்கத் தீர்மானித்தார். | திண்ணிதாக - உறுதியாக |
| கோடு அம் காழ் - வளைவினையுடைய அழகிய பூமாலை | |

இப்பாடல் கூறும் காதல் நிகழ்வு முல்லை நிலத்துக்குரியது. முல்லை நிலம் காடும் காடு சார்ந்த நிலப் பரப்பையும் கொண்டது. பண்ணை வளர்ப்பும் வேட்டை ஆடலும் இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில்களாக இருந்தன. பண்ணை வளர்ப்பினைச் செய்யும் ஆயர் குலத்தவரின் விளையாட்டுக்களில ஏறு தழுவுதலும் ஒன்று. இன்றும் தமிழ் நாட்டின் பல கிராமங்களில் மாட்டுச சவாரியும் காளையடக்கும் விளையாட்டும் நடைபெற்று வருகின்றன. அமெரிக்கா, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் இவ்வகை விளையாட்டுக்கள் போட்டி முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஏறு தழுவுதல் பண்டைய தமிழ் மக்களின் மண முறைகளில் ஒன்றாகவும் இருந்தது. அதாவது 'இந்தக் காளையை அடக்கினானுக்கு இப் பெண்' என்ற வகையிலும் ஏறு தழுவுதல் நடத்தப்பட்டது.

இந்தப் பாடலில் தலைவி காதல் ஒழுக்கத்தில் தான் அறத்தொடு நிற்கும நிலையைத் தோழிக்கு வெளிப்படுத்த, தலைவியை அவள் விரும்பியவனுக்கே கொடுக்கப் பெற்றோரும் தமயன்மாரும் தீர்மானித்துள்ள நற்செய்தியை தோழி அவளுக்கு கூறுகின்றாள்.

தோழிக்கு விடயம் ஏற்கனவே தெரியுமாயினும் தலைவிக்கு ஆவலைத தூண்டும் வகையில் கதையை வளர்த்து, அவளின் உளப்பாங்கினை நன்கு அறிந்து கொண்டு, ஈற்றில் அவளுக்குப் புணர்ச்சி இன்பம் தோன்றும வகையில் அந்த இனிய செய்தியைச் சொல்லிய தோழியின் பேச்சு வன்மை நயக்கத் தக்கது.

இவ்விதம் தலைவியின் சுற்றத்தார் தலைவனுக்கு அவளை மணம் புரிவிக்க இசையும் அகத்துறை 'வரைவுடன்படுதல்' எனப்படும்.

அன்னையோ, ஆயர் மகனையும் காதலை கைம்மிக்க
ஞாயையும் அஞ்சுதி யாயின் அரிதரோ; நீ உற்ற நோய்க்கு மருந்து;

மருந்து இன்றி யான் உற்ற துயராயின் எல்லா; வருந்துவேன் அல்லனோ யான்;

வருந்தாதி, மண்ணிமா சற்றநின் கூழையுள் ஏறவன்
கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற்று இவட்கென் நின்னை அப்
பொய்யில் பொதுவற்கு அடைசூழ்ந்தார் தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு. - கலித்தொகை: முல்லைக் கலி 7

| | |
|---|---|
| கூழை - கூந்தல் | இகா - தாழாத, விரும்பாத |
| கோடு - கொம்பு | வெய்தல் - விரும்புதல் |
| மாசு அற்ற - அழுக்கு இல்லாத | மண்ணி - கழுவி |
| திண்ணிதாக - உறுதியாக | ஏதிலான் - அயலான் |
| மால் - திருமால், முல்லை நிலத்துத் தெய்வம் | பொதுவன் - இடையன் |
| அடை சூழ்ந்தார் - கொடுக்கத் தீர்மானித்தார். | சில்லை - முரண்பாடும் |
| குறும்பு இவர் - முல்லைநிலத்து ஊரில் உள்ள | குறையென - காரியமென |
| புல்லினத்தார் - ஆட்டு இடையர் | கண்ணி - பூ |
| கோடு அம் காழ் - வளைவினையுடைய அழகிய பூமாலை | |
| ஏழை இரும் புகர் பொங்க - ஏழையாகிய பெரிய மறை ஏறு தள்ள | |
| அன்னையோ - அன்ன தன்மையோ, இன்னும் விளங்க வில்லையோ | |

இப்பாடல் கூறும் காதல் நிகழ்வு முல்லை நிலத்துக்குரியது. முல்லை நிலம் காடும் காடு சார்ந்த நிலப் பரப்பையும் கொண்டது. பண்ணை வளர்ப்பும் வேட்டை ஆடலும் இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில்களாக இருந்தன. பண்ணை வளர்ப்பினைச் செய்யும் ஆயர் குலத்தவரின் விளையாட்டுக்களில் ஏறு தழுவுதலும ஒன்று. இன்றும் தமிழ் நாட்டின் பல கிராமங்களில் மாட்டுச் சவாரியும் காளை


# Safety Truck
## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

We accept Welfare & Unemployment Insurance




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

In Classes
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
14 Years Canadian Experience with Trucks)

Tel: (905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON



GLOBAL
EDUCATIONAL TRUST PLAN

R.E.S.P. - அரசாங்க அங்கீகாரம் பெற்ற சேமிப்புத் திட்டம்
நீங்கள் முதலிடும் தொகைக்கு அரசின் 20% மானியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உலகின் எப்பாகத்திலும் கல்வி கற்பதற்கு உங்கள் சேமிப்பைப் பயன்படுத்தலாம்.
மேலதிக விபரங்களுக்கு: V. Sathiyaraj
Tel: 416 291-5853 Cell: 416 826 - 5853


அடக்கும் விளையாட்டும் நடைபெற்று வருகின்றன. அமெரிக்கா, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் இவ்வகை விளையாட்டுக்கள் போட்டி முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

ஏறு தழுவுதல் பண்டைய தமிழ் மக்களின் மண முறைகளில் ஒன்றாகவும் இருந்தது. அதாவது 'இந்தக் காளையை அடக்கினானுக்கு இப் பெண்' என்ற வகையிலும் ஏறு தழுவுதல் நடத்தப்பட்டது.

இந்தப் பாடலில் தலைவி காதல் ஒழுக்கத்தில் தான் அறத்தொடு நிற்கும் நிலையைத் தோழிக்கு வெளிப்படுத்த, தலைவியை அவள் விரும்பியவனுக்கே கொடுக்கப பெற்றோரும் தமயன்மாரும் தீர்மானித்துள்ள நற்செய்தியை தோழி அவளுக்கு கூறுகின்றாள்.

தோழிக்கு விடயம் ஏற்கனவே தெரியுமாயினும் தலைவிக்கு ஆவலைத் தூண்டும் வகையில் கதையை வளர்த்து, அவளின் உளப்பாங்கினை நன்கு அறிந்து கொண்டு, ஈற்றில் அவளுக்குப் புணர்ச்சி இன்பம் தோன்றும் வகையில் அந்த இனிய செய்தியைச் சொல்லிய தோழியின் பேச்சு வன்மை நயக்கத் தக்கது.

இவ்விதம் தலைவியின் சுற்றத்தார் தலைவனுக்கு அவளை மணம் புரிவிக்க இசையும் அகத்துறை 'வரைவுடன்படுதல்' எனப்படும்.

# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் பொருளியல்



நாங்கள் கடந்த பல இதழ்களில் வியாபாரக் கணக்குகள் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்தோம். இவ் இதழில் இருந்து உங்கள் தனிப்பட்ட வருமான வரி *(Personal Income Tax)* சம்பந்தமான விடயங்கள் இனிமேல் வரும் பல இதழ்களில் ஆராயலாம் என்று இருக்கின்றேன்.

உங்கள் 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அதாவது எவ்வாறு உங்கள் வருமான வரிப் பணத்தை சேமிக்கலாம் என்பது பற்றி இப்பொழுது இருந்தே ஆராய்வதன் மூலம் பலரும் பயனடையக் கூடியதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

முதலாவது உலக மகாயுத்தத்தின் நிமித்தம் *(August 1914-னஒவாமஙார 1918)* ஏற்ப்பட்ட நிதிப் பற்றாக் குறையை ஈடு செய்வதற்க்காக வருமான வரியானது 1917ஆம் ஆண்டு அப்பொழுது இருந்த அரசாங்கத்தினால் கனடாவில் அறிமுகம் செய்யப்பட்டது. அத் தருணத்தில் வருமான வரியானது ஒரு தற்காலிகமான வரியாகவே அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் அது இன்று பல மாற்றங்களையும் பெற்று அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 57% வீதமாக வருமான வரி இருக்கின்றது.

தனிப்பட்ட வருமான வரி சம்பந்தமான இத்தொடர் கட்டுரையில் முதலாவதாக வேலையில் இருந்து கிடைக்கும் வருமானம் பற்றியும் அவ் வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடிய கழிவுகள் *(Employment Income And Deductions)* என்பன பற்றியும் ஆராய்வோம். ஒரு வேலை இடத்தில் நாங்கள் வேலை செய்யும் போது கிடைக்கும் மாதாந்த அல்லது கிழமை ஊதியத்தைத் *(Employment Income)* தவிர பல சலுகைகள் *(Benefits)* எங்களுக்கு கிடைக்கின்றன. பொதுவாக இச்சலுகைகள் வருமானத்தில் சேர்க்கப் பெற்று இவற்றுக்கும் சேர்ந்து தான் நாம் வருமான வரி செலுத்துகின்றோம். ஆனால் இதற்கு விதி விலக்காக சில சலுகைகள் வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. உதாரணமாக உங்கள் முதலாளி *(Employer)* உங்களது தனிப்பட்ட சுகாதாரக் காப்புறுதிக்கு *(Private Health Plan)* செலுத்தும் பணம் வேலை இடத்தில் ஏற்படக் கூடிய விபத்து. வாகனத்திற்கு *(Accident Benefit Plan)* செலுத்தும் பணம் ஓய்வூதியக் காப்புறுதி *(Registered Pension Plan)* திட்டத்திற்கு செலுத்தும் பணம் என்பன உங்கள் வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே மேற்குறிப்பட்ட சலுகைகளுக்கு நீங்கள் வருமான வரி செலுத்துவதில்லை.

இது தவிர வேறு பல சலுகைகளும் உங்களுக்கு வருமான வரி செலுத்தாமல் கிடைக்கின்றன.

1. வேலை இடத்தில் இருந்து நீங்கள் பொருட்கள் வாங்கும் பொழுது கிடைக்கும் பொருட்களுக்கான தள்ளுபடி *(Employees Discount)*
2. வேலை செய்யும் பொழுது உங்களுக்கு கிடைக்கும் உணவுகள் அல்லது உணவுகளுக்கான பணம் *(Subsidize Meals)*
3. உங்கள் வேலைக்காக நீங்கள் வேலை செய்யும் பொழுது அணியும் பிரத்தியேகமான உடை *(Uniforms)* அவற்றுக்குரிய பராமரிப்புக்கான செலவுகள். பாத அணிகளுக்கான செலவுகள் என்பன.
4. ஒரு இடத்தில் இருந்து மற்றுமொரு இடத்திற்கு இடம் மாறும் போது ஏற்படும் செலவுகள் *(Moving Expensive)*.
5. பண்டிகைக் காலங்களிலும் மற்றும் நீங்கள் திருமணம் செய்யும் பொழுதும் முதலாளியிடம் இருந்து கிடைக்கும் பணம்.
6. உடற் பயிற்ச்சி சம்பந்தமாக நீங்கள் செல்லும் பயிற்ச்சி நிலையங்களுக்கு *(Recreation Facilities)* உங்கள் முதலாளி செலுத்தும் பணம்.
7. வியாபார சம்பந்தமாக நீங்கள் வெளி இடங்களுக்கு செல்ல இருந்தால் *(Business Travel)* அவற்றுக்கு முதலாளி செலுத்தும் பணம்.
8. தற்போதைய வேலை செய்வதற்கு நீங்கள் பாடசாலைக்கு சென்று உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு முதலாளி செலுத்தும் பணம்.
9. வாகனங்களை வேலைக்கு பயன்படுத்துவதற்காக உங்கள் முதலாளியிடம் இருந்து கிடைக்கும் பணம்.

இப்படியாக உங்கள் முதலாளியிடம் இருந்து பெறும் சலுகைகள் உங்கள் வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே இவற்றுக்கு நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டிய அவசியமும் கிடையாது.

இவற்றைத் தவிர உங்களுக்கு வேலை இடத்தில் இருந்து கிடைக்கக் கூடிய பின்வரும் சலுகைகளுக்கு நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டி இருக்கும்.

1. உங்கள் முதலாளியின் வியாபாரம் உங்களுக்கு கிடைக்கும் சிறிய பங்குடமை *(Stock Option)*
2. உங்கள் முதலாளியின் வாகனத்தை நீங்கள் வேலைக்கு பயன்படுத்துவதற்கான சலுகைகள்.
3. உங்களுக்கு முதலாளியிடம் இருந்து கிடைக்கும் கடனுக்கான வட்டி.
4. உங்களுக்கு முதலாளியிடம் இருந்து கிடைக்கும் ஓய்வூதியப் பணம்.
5. முதலாளி காரணம் இல்லாமல் வேலையில் இருந்து நீக்கினால் அதற்காக நீங்கள் அவரிடம் இருந்து பெறும் நஸ்ட ஈட்டுப் பணம்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளை நீங்கள் முதலாளியிடம் இருந்து பெறும் சந்தர்ப்பத்தில் அவருக்கு நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டி இருக்கும்.


Neelam SILK

உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்


முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- VASUNTHARA NETWORK CREPE
- SONALIKA PURE SILK
- JAIPUR CRYSTAL SILK

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம் சில்க்




புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)

☎ : (416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள

**Accident & Traffic Ticket**
(13 Years Insurance Claims Experience)

Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

Tel: (416) 755-2801
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.


மீண்டும் அடுத்த இதழில் உங்கள் வேலை இடத்தில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானத்தில் இருந்து எவ்வகையான கழிவுகளை உங்கள் 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பத்திரத்தில் கழிக்கலாம் என்பன பற்றியும் அதன் மூலம் எவ்வாறு நீங்கள் செலுத்த வேண்டிய வருமான வரியைக் குறைக்கலாம் (அல்லது நீங்கள் செலுத்திய வருமான வரியில் ஒரு பகுதியை மீண்டும் பெறலாம் என்பன பற்றிய விளக்கத்தை எதிர்பார்க்கலாம்.

வேற்க்குறிப்பிட்ட விடயங்களில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை எங்களுக்கு தெரியப்படுத்தினால் அதற்கான பதில்களை தரக் கூடியதாக இருக்கும்.
மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


**Mark Markandu, CGA**
Certified General Accountant
416 290 0946 / 416 834 6660
e-mail:- mark.markandu.cga@on.aibn.com

# விளையாட்டுத் தகவல்கள் (88)

-எஸ். கணேஷ்



## ஸ்ரீலங்கா அணிக்கு வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொடுக்கும் தமிழ் வீரன் முரளி!

மேற்குஇந்திய தீவுகள் அணிக்கும் ஸ்ரீலங்கா அணிக்கும் இப்போது மூன்று. 5 நாள் டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. ஸ்ரீலங்கா அணிக்கு தொடர்ந்து வெற்றிகளை பெற்றுக் கொடுக்கும் முரளிதரன் இம் முறையையும் மேற்கு இந்திய தீவுகளை விட்டு வைக்கவில்லை. முரளிதரனின் பந்துகளை எதிர்நோக்கி நிலை தடுமாறும் அவுஸ்திரேலியா. பாகிஸ்தான். இந்திய அணிகளின் வரிசையில் மேற்குஇந்திய தீவுகள் அணியும் இப்போது இடம் பெற்றுள்ளது. கடந்த சில வருடங்களாக மேற்கு இந்திய தீவுகள் அணி மறுசீரமைக்கப்பட்டு *Hooper* தலைமையில் *Lara*வை மீண்டும் உள்ளடக்கி மிகவும் திறமையாக வெற்றிகளைக் குவித்து வந்தது யாவரும் அறிந்ததே. ஆனால் இப்போது ஸ்ரீலங்காவுடன் மோதும் போது தவிடு பொடியாகியுள்ளது. முதல் இரு டெஸ்ட் ஆட்டங்களிலும் படு தோல்வியைச் சந்தித்துள்ளது. அதுவும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் நிச்சயமாக வெற்றி தோல்வி இன்றி முடியும் என்று மழை காரணமாக எதிர் பார்க்கப்பட்ட போதிலும் கடைசி நாள் முரளிதரனின் பந்துகளை சந்திக்க முடியாமல் தவிடு பொடியாகியுள்ளது. இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் *Man of The Match* விருது முரளிதரனுக்கே கிடைத்துள்ளது. அது மட்டுமல்லாமல் இரு ஆட்டங்களிலும் தனித்தனியே 10 விக்கெட்டுகளை ஒவ்வொரு ஆட்டத்திலும் சரித்துள்ளார். முரளிதரன் கலந்து கொண்ட இது வரை 68 டெஸ்ட் ஆட்டங்களில் ஒன்பது தடவைகள் 10 விக்கெட்டுகளையும் 31 தடவைகள் 5 விக்கெட்டுகளுக்கு மேலும் கைப்பற்றி இதுவரை டெஸ்ட் ஆட்டங்களில் 371 விக்கெட்டுகளை சரித்துள்ளார். இவருடைய அதி கூடிய பெறுபேறு டெஸ்ட் ஆட்டங்களில் ஒரு இனிங்சில் 65 ஓட்டங்களைக் கொடுத்து இந்தியாவுக்கு எதிராக 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியது கிரிகெட் இரசிகர்கள் ஒருவரும் மறந்திருக்க முடியாது. இது மட்டுமல்லாமல் ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் (*One Day Match*) 178 ஆட்டங்களில் 257 விக்கெட்டுகளை இது வரை கைப்பற்றியுள்ளார். ஒரு நாள் ஆட்டங்களில் 30 ஓட்டங்களை கொடுத்து 7 விக்கெட்டுகளை ஒரு இனிங்சில் கைப்பற்றி உலக சாதனையும் ஏற்படுத்தியுள்ளது யாவரும் அறிந்ததே. உலக அரங்கில் ஒரு தமிழ் வீரன் கிரிகெட் பந்து வீச்சில் முதல் இடத்தில் உள்ளான் என்றால் இது உலகத்தில் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் பெருமை தரும் ஒரு விடயமாகும். பல சாதனைகளை உலக அரங்கில் நிகழ்த்தி இருக்கும் இந்த தமிழ் வீரன் மேலும் பல புதிய உலக சாதனைகளை நிகழ்த்தி டெஸ்ட் ஆட்டங்களில் 500 விக்கெட்டுகளை எட்டிப் பிடிக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது கண்கூடு. எல்லாம் வல்ல ஆண்டவன் இந்த தமிழ் வீரனை மேன்மேலும் சாதனைகள் புரிய ஆசீர் வதிப்பாராகா!!!



இனி விடயத்திற்கு வருவோம் **நவம்பர் 17ஆம்** திகதி தொடங்கிய முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை இங்கு பார்ப்போம்:


முதல் களம் இறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி மிகவும் திறமையாக ஆடி 448 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் *Lara 178, Sarwan 88, Hooper 69, Ganga* 47 ஓட்டங்களையும் எடுத்தனர். முரளிதரன் 53 ஓவர்கள் பந்து வீசி 11 மேடின் ஓவர்களைப் போட்டு 126 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். வாஸ் 31 ஓவர்கள் பந்து வீசி 6 மேடின் ஓவர்களைப் போட்டு 95 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதற்குப் பதிலடி கொடுக்கு முகமாக ஸ்ரீலங்கா அணி மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி 590 ஓட்டங்களை எடுத்தது. சங்ககார 140. திலகரட்னா 105. சமரவீர; 77. ஜெயவர்த்தனா 99. அத்தபத்து 61 ஓட்டங்களைக் குவித்தனர். இது மேற்குஇந்திய தீவுகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா 1996/97 இல் எடுத்த 233 அதிகூடிய தொகையை முறியடித்துள்ளது.

அடுத்து களம் இறங்கிய மேற்கு இந்திய தீவுகள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 144 ஓட்டங்களுடன் தன்னை சுருட்டிக் கொண்டது. இதிலும் முரளிதரன் பங்கு மிக முக்கியமாகும். 31 ஓவர்கள் பந்துவீசி 10 மேடின் ஓவர்கள் போட்டு 44 ஓட்டங்களை மட்டுமே கொடுதது 5 விக்கெட்டுகளை சரித்துக் கொண்டார். இது இறுதி நாளான 5 வது நாளில் ஒரு விக்கெட்டுக்களை இழந்த நிலையில் மேற்கு இந்திய தீவுகள் ஆட்டத்தைத் தொடங்கியது. ஆனால் மதிய போசன இடைவெளிக்கு முன்பே முரளிதான் பந்து வீச்சில் தடுமாறி தனது சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இனிங்சின் தோல்வியில் இருந்து 6 ஓட்டங்களால் தப்பிப் பிழைத்துக் கொண்டது. அடுத்துக் களம் இறங்கிய ஜெயசூரியா மூன்றாவது பந்தில் ஒரு பவுண்டரி அடித்து வெற்றியைத் தமதாக்கிக் கொண்டார். ஸ்ரீலங்கா 10 விக்கெட்டுகளால் மேற்கு இந்திய தீவுகளை வெற்றி கொண்டது. இரண்டு இனிங்சையும் சேர்த்து 11 விக்கெட்டுகளை வீழ்த்திய முரளிதரன் *Man of The Match* விருதைத் தட்டிச் சென்றார்.

**இரண்டாவது டெஸ்ட் ஆட்டம்: நவம்பர் 21 - 25**

கிரிகெட் இரசிகர்களுக்கு இறுதி நாள் கதிரையின் நுனியில் இருந்து பார்க்கும் ஒரு விறுவிறுப்பான ஆட்டமாக அமைந்தது. முதல் நான்கு நாட்களும் மழை காரணமாக ஆட்டம் இடையிடையே நிறுத்தப்பட்டதால் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றியே முடிவடையும் என்று எல்லோரும் எதிர்பார்த்த போதும் இறுதி நாள் அன்று மீண்டும் முரளிதரன் அனைவரது ஊகங்களையும் பொய்யாக்கி உள்ளார். முதலில் களம் இறங்கிய ஸ்ரீலங்கா இரண்டாவது நாள் இறுதியில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 288 ஓட்டங்களை எடுத்தது. ஜெயவர்த்தனா 88. திலகரட்னா 87, சமரவீர 29 ஓட்டங்களையும் எடுத்தனர். *Collins*உம், *Dillon* உம் தலா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினர். அடுத்து களம் இறங்கிய மேற்கு இந்திய தீவுகள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 191 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. லாரா 74. *Gayle* 44 ஓட்டங்களை எடுத்தனர். முரளிதரன் 23 ஓவர்கள் பந்து வீசி 5 மேடின் போட்டு 54 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளையும் வாஸ் 22 ஓவர்கள் பந்து வீசி 8 மேடின் போட்டு 56 ஓட்டங்களையும் கைப்பற்றினார். அடுத்துக் களம் இறங்கிய ஸ்ரீலங்கா நான்காவது நாள் மிக விரைவாக ஓட்டங்களை எடுக்கத் தொடங்கியது. 67 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 224 ஓட்டங்களை பெற்ற நிலையில் 5வது நாள் மதிய போசனத்திற்கு முன்பு அணித் தலைவர் ஜெயசூரியா மிகவும் சமயோசியமாக முரளிதரன் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தார். இதில் அத்தபத்து 84. ஜெயசூரியா 55. சங்ககார 45 ஓட்டங்களை எடுத்திருந்தனர். அடுத்து இறுதிநாளின் மதியபோசனத்தின் பின்பு களம் இறங்கிய மேற்கு இந்திய தீவுகளை எப்படியாகவும் மடக்க வேண்டும் என்று கருதி இரண்டு பக்கமும் முதலில் வேக பந்து வீச்சாளர்களையே பந்து வீச வைப்பது வழக்கம். அனால் ஜெயசூ ஒருபக்கம் வேக பந்து வீச்சாளர் வாஸ்யையும் ஒரு பக்கம் முரளிதரனை அறிமுகப்படுத்தினார். ஜெயசூரியா நம்பியது வீண் போகவில்லை. இரண்டாவது ஓவரிலேயே *Ganga*இன் விக்கெட்டை முரளிதரன் பிடுங்கி எறிந்தார். கடைசி 16 நிமிடங்கள் ஆட்டம் முடியும் தறுவாயில் இருந்த போது முரளிதான் 3 விக்கெட்டுகளை பிடுங்கி எறிந்தார். தனது கடைசி 12 பந்துகளில் 3 விக்கெட்டுக்களை சரித்து முரளிதரன் ஆட்டத்தை முடிவிற்குக் கொண்டு வந்தார். மேற்கு இந்திய தீவுகள் அணி சகல விக்கெட்டுகளையும் 190 ஓட்டத்தில் இழந்தது. மீண்டும் முரளிதரன் 35 ஓவர்கள் பந்து வீசி 16 மேடின் ஓவர்கள் போட்டு 81 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளை எடுத்துக் கொண்டார். இதன் மூலம் 10 விக்கெட்டுகளை மொத்தமாக இவ் ஆட்டத்தில் பெற்றுக் கொண்டார். இதன் மூலம் ஸ்ரீலங்கா 131 ஓட்டங்களால் மேற்கு இந்திய தீவுகளை மண்கவ்வச் செய்தது. இரண்டாவது டெஸ்ட் இலும் முரளிதரன் *Man Of The Match* விருதைப் பெற்றுக் கொண்டார்.

**"வாழ்க முரளிதரன்" "வளர்க தமிழன் புகழ் உலகமெங்கும்!"**

ACTION HONDA
புதிய பழைய
HONDA, VOLVO
மற்றும் CHRYSLER
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது

எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service
இந்த மாதம் மட்டும்
2.8% Financing for All
New 2001
CRV (In Stock Only)

Call me Now!! 416-704-1179
உங்களுக்காக காத்திருக்கும் நேரம்
Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough
Finch Av
HWY 401
Lawerance Av
Eglinton Av
Kingston Rd
Kennedy Rd
Markham Rd
Morningside Av

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்

*1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்களின் தொடர்ச்சி*

**தென்றலே என்னைத் தொடு:-** இப்படத்தில் நடிக-நடிகையர் - மோகன், தேங்காய் சீனிவாசன், மகேந்திரன், வெண்ணிறஆடை மூர்த்தி, வீரராகவன், ஜெயஸ்ரீ (அறிமுகம்) காந்திமதி, பபிதா, அனுபமா மற்றும் பலர் நடித்துள்ளனர். பாடல்களை வாலி , வைரமுத்து எழுதியுள்ளனர்.

வெண்ணிறாடை மூர்த்தி



படித்துப் பட்டம் பெற்ற வாலிபனுக்கும், அந்தஸ்தைப் பாராமல் குணம் ஒன்றையே பாராட்டிக் காதலித்த பெண் ஒரு ஒருத்திக்கும் இடையே நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளைக் கொண்டு காதலானது, சந்தேகம் என்ற காரணத்தால் பிரிதல், மீண்டும் சந்தித்தல் என்ற வகையில், மெல்லிய நூலால் பின்னப்பட்ட வலைபோல் உருவாக்கிய கதை அமைப்பைக் கொண்டது.

விசு



**சம்சாரம் அது மின்சாரம்:**
விசு, ரகுவரன், சந்திரசேகர், டெல்லி கணேஷ், திலிப், லட்சுமி, கமலா காமேஷ், மனோரமா, மாதுரி, ரேவதி மற்றும் பலர் நடித்துள்ளனர். இசை சங்கர்-கணேஷ். பாடல்கள் வைரமுத்து. இப்படத்திற்கு கதை, வசனம் டைரக்ஷன் செய்தவர் விசு.

குடும்பத்தில் நிகழும் சம்பவங்களை, இயற்கையாகத் தோன்றும் வீரத்தில் பட உருவில் செயல்படுத்தி வெற்றி காணும் விசு, இந்தச் 'சம்சாரம் அது மின்சாரம்', பட வாயிலாக அபரிமிதமான வெற்றியைப் பெற்றுள்ளார். கூட்டுக் குடும்பத்தில் நிகழும், உணர்ச்சி மயமான சம்பவங்களை அழகாகச் சித்தரித்திருக்கிறார். குடும்பத்தின் தலைவர், அவர் சொற்படி செயல்படும் மனைவி, சிக்கனமான ஒரு மகன், குடும்பத்தைச் சீராகச் செயல்பட வைத்து ஒற்றுமையை நிலைநாட்ட வழலும் மருமகள், தொழிலாளியான மற்றொரு மகன், தனிமையை நாடும் அவன் மனைவி, தேர்வில் தவறிடும் இன்னொரு மகன் கணவன் சொற்படி நடக்காது மனம்போன போக்கில் நடந்திடும் மகள் ஆகிய இவர்களைக் கொண்டு அழகான கதை சொல்லியிருக்கிறார் விசு.

ஒற்றுமையாக இயங்கி வந்த குடும்பத்தில் அவரவர் போக்கு, குடும்பத்தில் குழப்பங்களை எப்படி உண்டாக்குகிறது என்பதை இந்தக் கதையில் விமரிசையாகக் கூறியிருக்கிறார்.

பிளவு ஏற்பட்ட குடும்பத்தை மருமகள் தனது முயற்சியால் பழைய ஒற்றுமை நிலைக்கு கொண்டுவருகிறார். ஆனால், தனித்தனியாக வாழ்வதுதான் சிறந்த முறை என்ற ஒரு திடீர் முடிவை ஏற்படுத்துகிறாள். இதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இந்தப் படத்தில் அனைத்து நடிகர்களும், தாங்கள் ஏற்றுக்கொண்ட கதா-பாத்திரங்களைச் சிறப்பாக நடித்துள்ளார்கள். லட்சுமி, தான் ஒரு சிறந்த நடிகை என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார். விசுவின் அனுபவ முத்திரைகளை அங்கங்கு பதித்திருக்கிறார். சில இடங்களில் செயற்கைத்தனம் இடம்பெற்றிருந்தாலும் ஒரு நிறைவைத் தருகிற படமாக, காலத்துக்கேற்ற வகையில் அமைந்துள்ளது. மற்றும் இசை, ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு ஆகியன நிறைவை அளித்துள்ளன.




விசு எழுதிய இந்த கதை, 'உறவுக்குக் கை கொடுப்போம்' என்ற தலைப்பில் சில ஆண்டுகளுக்கு முன்னர் படமாக வெளிவந்து வெற்றிபெறவில்லை. இப்பொழுது 'சம்சாரம் அது மின்சாரம்' என்ற பெயரில் வெளிவந்து தேசிய அவார்டாக நாற்பதாயிர ரூபாயையும் தங்கப்பதக்கத்தையும் பெற்று வெற்றி விழா கொண்டாடியது. ஒரு மொழியில் எடுக்கப்பட்ட கதை, மீண்டும் படமானால், பரிசுபெற தகுதியற்றது என்ற பொது விதி புறக்கணிக்கப்பட்டு இந்தப் படம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

**பிள்ளை நிலா**
மோகன், ராதிகா, பேபிஷாலினி முதலியோர் நடித்துள்ளனர்.
இப்படத்தின் கதை, சுற்றுலாவின்போது, கதாநாயகியை தீயவர்களிடமிருந்து கதாநாயகன் காப்பாற்ற, அவள் காதலிக்கிறாள். வேலையும் பெற்றுக் கொடுக்கிறாள். ஆனால், அவன் ஏற்கனவே மணமானவன் என்று தெரிகிறது. தெரிந்தும் மணக்க வேண்டுகிறாள். அவன் மறுக்கவே, ஆத்திரப்பட்டுத் தற்கொலை செய்து கொள்கிறாள். பிறகு ஆவியாக அவன் குழந்தையினுள் புகுந்து கொண்டு அவன் குடும்பத்தை ஒழிக்கத் திட்டமிடுவது கதையின் முக்கியக் கருத்து.

ராதிகா மிகத் திறம்பட நடித்துள்ளார். பேபி ஷாலினியின் நடிப்பு இரசிகர்களை வியக்க வைத்தது. இனிமையான பாடல்களும் இசை அமைப்பும் உண்டு. ஒளிப்பதிவு பாராட்டத்தக்கதாய் இருந்தது. திகில் சித்திரமாய் விளங்கிய இப்படம் வெற்றி பெற்றது.

* * * * *

**J DAYCARE**

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week -$60.00

தினசரி நடவடிக்கைகள்:-
✱ உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033


151 Lamareaux Dr., TownHouse 99A
(Finch/Birchmount) தொடர்புகளுக்கு: Mrs. S. J. சௌந்தரநாயகம்

**VIMAC HOME RENOVATIONS**

SPECIALIZING IN INSTALLATION OF
- KITCHEN CABINETS
- COUNTER TOPS
- SPACE MAKING CABINETS
- BATHROOM /LAUNDRY UNITS

FREE ESTIMATE

& GENERAL HOME RENOVATION
CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227
REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES



# தூறல்

## சிறந்த போர்த் திரைப் படங்கள்

ஒரு சில வாரங்களுக்கு முன்னால் அமெரிக்க அரசாங்கம் Hollwood தயாரிப்பாளர்களுடன் சந்திப்பு ஒன்றை நடாத்தியுள்ளது. முக்கிய நோக்கம் போர்த் திரைப்படங்கள் தயாரிப்பதே. இத் தயாரிப்பாளர்களுக்கு அரச உதவியும் உண்டு. வியட்நாம் யுத்தம் முடிந்து ஒரு சில வருடங்களின் பின்னர் நடாத்தப்பெற்ற கருத்துக் கணிப்பு ஒன்றில் 60% வீதமான அமெரிக்கர்கள் அமெரிக்க போரில் பங்கு பற்றுவதை ஆதரித்துள்ளனர். ஒரு போரின் இரத்தத் தடயங்கள் அழிவதற்கு முன்பாகவே அடுத்த போருக்கு தயாராக வேண்டும் என்ற அறை கூவல் போன்றதே இது.

திரைப் படங்கள் இதற்கு முக்கிய பங்காற்றியுள்ளன. உதாரணமாக Ramboo போன்ற படங்கள் மிகவும் கவனமாக கையாளப்பட்டுள்ளன. சோவியத்யூனியனிலும் ஆப்கானிஸ்தானிலும் வியட்நாமிலும் 'ரம்போ' நடமாடியுள்ளார். இவ்வாறாக திட்டமிடப்பட்டு ஒரு Heroவை வளர்த்தெடுப்பதன் மூலமும் மயிர்கூச் செறியும் வீர சாகசங்களை இளைஞர்கள், சிறுவர்கள் மத்தியில் உலாவிடுவதும் நாளைய போருக்கு அத்திவாரமிடும் தளங்களாகும். இவற்றையும் விமர்சித்தது. போர் மனித அழிவு பற்றிய விமர்சனக் கண்ணோட்டத்துடன் பல நல்ல படங்கள் வெளி வந்துள்ளன. இந்தக் கட்டுரையின் நோக்கம் அவ்வாறான சிறந்த படங்கள் என விமர்சகர்களால் கருதப்படுபவற்றை அறிமுகப்படுத்துவதே இங்கு குறிப்பிடப்படும் சில படங்கள் பற்றிய விரிவான பார்வை தொடர்ந்து வரும கடடுரைகளில் இடம் பெறும்.




**Saving Private Ryan (1998):** இயக்கம்: Steven Spielberg. இரண்டாம் உலக யுத்தத்தின் போது 82nd Airbore இல் கடமையாற்றிக் கொண்டிருந்த Ryan தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பு கப்டன் John Miller (Tom Hanks) ஒப்படைக்கப்பட்டது. இதுவே இதற்கான கரு.
5 ஒஸ்கார் விருதுகளை இப்படம் பெற்றது.




NEW Technology
Security and Sound Inc.

Tel: (416) 335-4070
Fax: (416) 335-9936

உங்கள் வாகனங்களுக்குத் தேவையான



Car Alarm, Remote Car Starter, LED Scanner, Stereo, Fog Lamps and Sports Accessories.
Sales And Installation

WINTER SPECIAL

REMOTE STARTER $99.99 UP
CASSETTE PLAYER $124.99 UP
CD PLAYER $169.99 UP

VIPER
CLIFFORD The Science Of Security
AVITAL Vehicle security
toucan INDUSTRIES. INC.
Pioneer
PRESTIGE



* We also do any Electrical

நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும் பொருத்திக்கொள்ளவும் நாடுங்கள்.

Autobahn
Steeles Ave
Passmore Ave.
McNicoill Ave.
3501 #9
Finch Ave
Mccowan Rd
Middlefield Rd

Tel: (416) 335-4070
3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont M1V 2N3


**Zulu (1964):** இயக்கம்: Cy Endfield. இது உண்மைக் கதையை மையமாகக் கொண்டது. 1879ஆம் ஆண்டு 100 பிரிட்டிஷ் வீரர்களுக்கும் 4000க்கு மேற்பட்ட Zulu விடுதலை வீரர்களுக்கும் இடையே ஏற்பட்ட யுத்தமே இத் திரைப்படம்.

**Glory (1989):** அமெரிக்க சிவில் யுத்தம் பற்றிய படம். உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டது. Suth Massachusetts படைப் பிரிவில் உள்ள வீரர்கள் அனைவரும் கறுப்பினத்தவர்கள். இவர்கள் அனைவரும் South Carobina - Fort Wagneயைக் கைப்பற்றுவதற்காக போரிடுகிறார்கள். Matthew Broderick, Morgan Freeuan, Denzel Washington ஆகியோர் பிரதான பாத்திரங்களேற்று நடித்துள்ளனர்.

**Schindler's List (1993):** இயக்கம்: Steven Spielberg. இரண்டாம் உலகப் போரின் போது நடைபெற்ற உண்மைச் சம்வங்களே இத்திரைப் படம். ஒஸ்காரின் சிறந்த திரைப்படம், இயக்கம் போன்ற பல விருதுகளைத் தட்டிச் சென்றது.

**Platoon (1986):** இயக்கம்: Oliver Stone. வியட்நாம் போரில் அமெரிக்கா நடந்து கொண்ட முறை பற்றிய விமர்சனமே. போர் வீரர்களின் காட்டுமிராண்டித் தனம் விமர்சிக்கப்படும் அதே கணம் அவர்களது உணர்வுகளும் காட்டப்படுள்ளன. வியட்நாம் போர் பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க படமிது. Oliver Stone வியட்நாம் போரில் பங்கு பற்றிய ஒரு வீரர்.



**Tora Tora Tora (1970):** Pearl Harbor தாக்குதலைப் பற்றிய படம். அமெரிக்கா, யப்பான் - இரு நாடுகளது பார்வையும் முன் வைக்கப்பட்டள்ளது. இயக்கம் Richard Fleischer & Toshio Masuda. யப்பானியத் தளபதி Yamamoto, துறைமுகத் தாக்குதலின் பின்னர் கூறிய கருத்து தூங்கும் சிங்கத்தை எழுப்பும் முயற்சியே இத் தாக்குதல் என்பதாகும்.

**Heaven and Earth (1993):** இயக்கம்: Oliver Stone. Ley Hayship இன் நாவலை மையமாகக் கொண்டது. வியட்நாம் போரில் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு, கைவிடப்பட்டவள். பின்னர் அமெரிக்க வீரருக்கு மனைவியாகிறாள். அமெரிக்கா வரும் அவள் சந்திக்கும் பிரச்சினைகள், பின்னர் தற்கொலை செய்து கொள்ளும் கணவன் எனச் செல்கிறது இப்படம்.

**Hamburger Hill (1987):** இயக்கம்: John Irvin May 10, 1969க்கும் May 21st 1969க்கும் இடையில் 101st Airborne Division Hill 937 அல்லது Ap Bia மலையில் ஏற்பட்ட யுத்தம். வீரர்களின் விமர்சனப் பாதையில் விரிந்து செல்லும் இத்திரைப்படம் வியட்நாம் யுத்தத்தின் வரலாற்றுக் காரணிகளாலும் முக்கிய கேந்திர மையத்தாலும் Hill 937 முக்கிய இடம் பெறுகிறது.

**Gandhi:** இந்திய சுந்திரப் போரில் பிரிட்டிஷ் வீரர்கள், அரசு ஆகியோரின் நடவடிக்கைகளும் காந்தி முன்னெடுக்கும் அகிம்சா வாதமும் முன் வைக்கப்படுகிறது. Oscarஇன் 8 (1982) விருதுகளைத் தட்டிச் செல்கின்றது.

**Apocalypse Now (1979):** இயக்கம்: Francis Ford Coppola. நான்கு வெவ்வேறு தளங்களில் வியட்நாம் யுத்தம் விமர்சிக்கப்பட்டுள்ளது. Martin Sheen, Marton Brando போன்ற பிரபல நடிகர்கள் நடித்துள்ளனர்.

**The Thin Red Line:** இயக்கம்: Terrence Malick. இரண்டாம் உலக யுத்தத்தின் போது யப்பானியத் தீவான Guodalcanalஐ கைப்பற்ற முயற்சிக்கும் Charlie குழுவினரைப் பற்றியது.

**Full Metal Jacket (1987):** இயக்கம்: Stanley Kubrick - Boot Camp, இராணுவப் பயிற்சி முகாம் வியட்நாம் யுத்தத்தில் வீரர்களின் பங்களிப்பு பாலி உணர்வுகள் போன்றன விமர்சிக்கப்பட்டுள்ளன.

**Sands of Iwo Tina (1944):** இயக்கம்: Allan Dwan. கடற்படை வீரர்கள் - யப்பானிய தீவுகளைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடுகிறார்கள். Boot Campஇல் ஆரம்பமாகும் படம் எவ்வாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் எனத் தொடங்கியது.

இவற்றை விட பல படங்கள் உள்ளன. இப் படங்கள் அனைத்தையும் சகல வீடியோ கடைகளிலும் (தமிழ் கடைகளல்ல) பெற்றுக் கொள்ளலாம்.

இவற்றில் சில படங்கள் வீரர்களின் பார்வையிலே கூறப்பட்டுள்ளது!. இவை Ramboo போன்ற பிரச்சார படங்களல்ல. போரின் கட்டாயமும் தீவிரமும் உள்ள நிலையில் அதன் பாதிப்புக்களுக்கும் நாங்கள் உள்ளாகின்றோம். இப்படங்களைப் பார்ப்பதன் மூலமாவது போரைப் பற்றிய தெளிவை நாங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

*-வானரன்-*

# விண்வெளி

**அந்நியார்கள்:- ஏலியன்கள் 72** — *தருபவர் - கனி*

ஏலியன்கள் இருப்பதை நம்புகிறீர்களா? ஏலியன்கள் இருக்க முடியும் என்பதை நம்புகிறீர்களா? சென்ற தடவை நான் விட்டுச் சென்ற இரண்டு கேள்விகள். ஆம்! இல்லை! என்று ஒரே சொல்லில் கூறிவிடக் கூடிய கேள்விகள் இல்லை!.

ஏலியன்கள் இருக்க முடியுமா என்ற கேள்வியிற்கு, ஏலியன்கள் இருப்பது சாத்தியமே என்றுதான் கூற வேண்டும். எமது பிரபஞ்சம் நாம் எண்ண முடியாத அளவு, மிகப் பெரியது. அதில் மில்லியன், மில்லியன் கலக்சிகள் உள்ளன. பல பில்லியன் நட்சத்திரங்கள் உள்ளன. இந்த நட்சத்திரங்களைச் சுற்றி எத்தனையோ பல பில்லியன் கோள்கள் உள்ளன. இக் கோள்களில் சில உயிரினங்கள் வாழ்வதற்கான, உயிரினங்கள் தோன்றுவதற்கான சூழலைக் கொண்டிருக்கலாம். உயிரினங்கள் ஆண்டவனின் படைப்பாக இராது இயற்கையின் மாற்றங்களின் போதான ஒரு விபத்தில் தோன்றியவையாக இருப்பின், வேறு பல உலகங்களிலும் இது போன்ற சூழல்க் காரணிகளினால் ஆன விபத்து ஏற்பட்டிருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. அதாவது உயிரினங்கள் இயற்கைச் சூழலின் ரு வெளிப்பாடாக இருக்குமாயின் நமது பூமியைத் தவிர்ந்த வேறு உலகங்களிலும் இருக்கலாம். இவ்வுயிரினங்களில் சில பரிணாம வளர்ச்சியினால் மனிதர்கள் போன்று புத்தி ஜீவிகளாக மாறி விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பவற்றில் முன்னேற்றம் கண்டு வாழும் உயிரினங்களாக வாழக் கூடிய சாத்தியங்கள் உண்டு.

முடிவாக உயிரினங்கள் உலகம் பிரபஞ்சம் எல்லாம் செயற்கையாக இராமல், அதாவது யாரோ ஒருவரின் படைப்பாக இராமல் சிறப்பாகக் கூறின் இறைவனால் படைக்கப்படாமல் இருப்பின் எங்காவது ஏலியன் இருக்க முடியும் என்று நம்பத் தான் வேண்டும். மாறாக இப் பிரபஞ்சமே ஒரு செயற்கையானதாயின் அதாவது கடவுளினால் படைக்கப்பட்டிருப்பின் - பிறப்பிக்கப்பட்டு இருப்பின் இப் பிரபஞ்சத்தில் எங்கேயும் ஏலியன்கள் இருக்க முடியாது. ஏனெனில் சமயக் கொள்கைகளின் படி பூமி மாத்திரமே உயிரினம் வாழத் தகுதியாக இறைவனினால் படைக்கப்பட்டுள்ளது.

இனி ஏலியன்கள் இருக்கின்றார்களா என்ற கேள்வியைப் பார்ப்போம். இந்தக் கேள்வி நான் முன்னர் கூறியது போலவே கிட்டத்தட்ட கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது போன்றது. பலர் கடவுள் இருக்கிறார் என்றே நம்புகிறார்கள். ஒரு சிலர் தாம் கடவுளைக் கண்டோம்! அவர் அருளைப் பெற்றோம் என்று கூறுகின்ற போதிலும் பலரது வாழ்க்கை அனுபத்தில் கடவுள் வெறும் நம்பிக்கையில் மட்டுமே நிலைத்து நிற்கிறார். கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்குப் பலரது பதில் ஆம் எனவும் சிலரது பதில் இல்லை என்றும் வரும். எனக்குத் தெரியாது என்ற பதில் வருவதே இல்லை எனலாம்.

ஏலியன்கள் இருக்கிறார்கள் என்ற கேள்விக்கு பெரும்பாலானவர்களின் பதில் 'எனக்குத் தெரியாது" என்றே வரும். ஒருசிலர் இல்லை என்று கூற வேறு சிலர் மாத்திரம் 'ஏலியன்களைக் கண்டோம் அவர்கள் எங்களுடன் தொடர்பு கொண்டவர்கள்' எனக் கூறுகின்றார்கள். இவ்விடயத்தில் GEORGE S HOWARD எனும் உளவியல் பேராசிரியர் என்ன கூறுகின்றார் எனப் பார்ப்போம்."

"எனக்கு இதுவரை கடவுளின் அனுபவமோ அல்லது ஏலியன்களின் அனுபவமோ ஏற்பட்டதில்லை. எனது வாழ்க்கை அனுபவமெல்லாவற்றிற்கும் இயற்கை விளக்கமே உள்ளது. எனது வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் யாவற்றுக்கும் கடவுளினதே அல்லது ஏலியன்களினதே தொடர்புகளைக் காண முடியவில்லை. எல்லாவற்றிற்கும் எளிமையான இயற்கை விளக்கங்களையே அனுபவித்திருக்கிறேன், காண்கிறேன். அதற்காக கடவுள் (அல்லது ஏலியன்) இருக்கிறார் என்பதை நம்பவில்லை என்றல்ல... கடவுள் இருக்கிறாரா இல்லையா அல்லது ஏலியன்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதைக் கூறுவதற்கான சரியான அனுபவத்தை நான் இன்னமும் பெறவில்லை என்றே கூறுவேன். ஏனெனில் எனது வாழ்க்கையில் இவற்றிக்கான எனது தேடுதல் பிழையான இடமாக இருக்கலாம்.


கடவுளே அல்லது ஏலியன்களே தம்மில் நான் நம்பிக்கை கொள்ளத் தக்கதாக தொடர்பு வைத்திருக்க வேண்டும். எனது நிலையில் இருக்கும் சிலர் கடவுளை அல்லது ஏலியன்களை இல்லை என்றே தான் கூறுவார்கள். எனினும் நான் அதை ஞானமான முடிவு இல்லை என்றே கூறுவேன். ஆக லியன்கள் இருப்பதை நம்புகிறீர்களா? என்ற கேள்விக்கு" எனக்குத் தரியாது" என்றே பதிலளிப்பேன்"


சரி, நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? நாங்களும் கூட..... என்றே தனா. கூறுகின்றோம் என்கின்றீர்களா? மறு முறையில் இருந்து சில விவகாரமான விவகாரங்களைக் கவனிப்போம் - ஏலியன்கள் பற்றி!

• • •

**<u>பொது அறிவுக் குறிப்புகள்</u>**

*** சுவிட்சர்லாந்திற்கும், இத்தாலிக்கும் இடையில் ஆல்ப்ஸ் (Alps) மலையின் குறுக்காக அமைக்கப்பட்டு உள்ள ஸிம்ப்ளன் (Simplon) குகைப் பாதைதான் உலகின் மிக நீண்ட இரயில் பாதைக் குகையாகும். இதன் நீளம் 12 மைல்.**

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS

உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

YARL
WINDOW COVERING
1530 WARDEN AVENUE
உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்
CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES

இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்தக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377
FREE ESTIMATE

CBAO

New Immigrants Welcome

Credit Repairs
Business & Personal
Loans and Lines
Car Loan & Leasing
Credit Cards

Mortgage
Buy, Sell houses
Real-Estate Consulting

If we can't do it, no one can!

Tel : 416-410-5677, 905-275-6644 Fax: 905-275-8503


## ஆனைமுகன் அருளிருந்தால் வாழ்வு வரை இன்பமயம்

நா. க. சிவராமலிங்கம்

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரசன்ன
வதனம் த்யாயேத் சர்வ விக்னோ சாந்தயே

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் மெய்ப்பொருளாம்
கண்ணிற் பணிமின் கனிந்து

பிள்ளையார் பெருமைக்குரிய கடவுள். முதற் பூசை பெறும் தெய்வம் அவர். இதனால் அவரின் முதன்மை விளங்கு பிள்ளையாரை வணங்கினால் எல்லாத் தெய்வங்களையும் வணங்கிய பலன் கிட்டும். பிள்ளையார் இல்லாத இடமே இல்லை எனலாம். பட்டி, தொட்டி, சந்து, பொந்து, ஆலமரத்தடி, ஆற்றங்கரை அனைத்து இடங்களிலும் அவர் ஆனந்தமாக அவர்ந்திருந்து அருள் பாலிப்பார். எல்லாக் கோயில்களிலும் அவரது சந்நிதி இருப்பதுடன். அவருக்கு தனியான கோயில்களும் உள்ளன.

'வி' என்றால் சிறப்பு. நாயகன் என்றால் தலைவன். விநாயகன் என்றால் தனக்கு மேலே ஒருவரில்லாத் தன்னிகரில்லாத் தலைவன் என்று பொருள். அவர் பிரணவ சொரூபி. ஓம்கார ரூபன். கணங்களுக்கு அதிபதி, கணபதி, கணேசன் கணாதிபன் விக்கினங்களை விலக்கும் விக்னேஸ்வரர். எடுத்த காரியங்களை இலகுவில் இனிதே நிறைவுற விநாயகனை விநயமகா வேண்டித் தொழுகின்றோம்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே



